FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)
(BNSS பிரிவு 173 இன் கீழ்)

~~(Under Section 154 Cr.P.C)~~
~~(குற்ற வி தொ பிரிவு 154 இன் கீழ்)~~

C 8120360

1. District மாவட்டம் திருச்சி மாநகர் PS காவல்நிலையம் கண்டோன்மெண்ட் மற்றும் கண்டோன்மெண்ட் புகார் நிலையம் Year ஆண்டு 2025 FIR No. மு.த.அ. எண் 10 Date நாள் 30/7/25

2. (i) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106

(ii) Act சட்டம்: PC Act - 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7, 7A

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 29/7/25 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 14.00 hrs Time to : நேரம் வரை 17.15 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30/7/25 Time : நேரம் 14.45 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக நேரிலேயே தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5 கி.மீ மேற்கு.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்டார மேலிடத்துக்கு உட்பட்ட பகுதி / மேற்கு திருச்சி.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ஜ. இராமலெட்சுமி (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் தாய் சந்துரு

(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 1982 (d) Nationality நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் -

Date of Issue : வழங்கப்பட்ட நாள் - Place of Issue : வழங்கப்பட்ட இடம் -

(f) Occupation: தொழில் தூய்மை பணியாளர் (g) Address : முகவரி மாநகர் தூய்மை பணி அலுவலகம், திருச்சி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) திரு. [illegible], வட்டார மேலிடத்து அலுவலர், மேற்கு வட்டார மேலிடத்து அலுவலகம், திருச்சி
2) திரு. K. மோகன், மேற்பார்வை தூய்மைப் பணியாளர், மேற்கு வட்டார மேலிடத்து அலுவலகம், திருச்சி
3) திரு. M. [illegible] (தனியார் ஊழியர்)
4) திரு. P. [illegible] (தனியார் ஊழியர்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதமில்லை -


9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம், (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)



13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / trahsferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

30.7.25

30/7/25

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண் .....

கனம் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2025-இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.....

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 30.07.2025ஆம் தேதி மாலை 14.45 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருமதி.ஆ.இராமலெட்சுமி, ஆய்வுகுழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுகுழு அலுவலகம், திருச்சி என்பவர் ஆஜராகி 29.07.2025ஆம் தேதி திருச்சி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தபோது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகளின்படி (மகஜர்) நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறைகளின் (மகஜர்) விபரங்கள் பின்வருமாறு: 30.07.2025 திருச்சி அனுப்புநர் ஆ.இராமலெட்சுமி, ஆய்வுகுழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுகுழு அலுவலகம், திருச்சி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, திருச்சி. ஐயா, பொருள்: திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகம் - திடீர் சோதனை மேற்கொண்டது - மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி . . . திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி ரகசிய தகவலின் அடிப்படையில், 29.07.2025ம் தேதி, மாலை சுமார் 13.15 மணியளவில், திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து திருச்சி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் திரு.அ.பிரசன்ன வெங்கடேஷ் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன், மாவட்ட ஆய்வு குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட நானும் புறப்பட்டு, திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தை 14.00 மணி முதல் 19.15 மணி வரை திடீர் சோதனை மேற்கொண்டு, சோதனையின்போது அந்த அலுவலக வளாகத்தினுள் நின்று கொண்டிருந்த புரோக்கர்கள் 1)திரு.சேதுராஜ், த/பெ.மாணிக்கம் செட்டியார், நெ.3/109-ஏ, புதுதெரு, சோமரசம்பேட்டை, திருச்சி என்பவர் RTO திரு.நடராஜனின் உத்தரவின்படி பொது மக்களிடமிருந்து கூடுதல் தொகை பெற்று, வட்டார போக்குவரத்து அலுவலருக்கு கையூட்டு கொடுக்க வைத்திருந்த பணம் ரூ.31,840/-யும் 2)திரு.ரமேஷ், த/பெ.பெரியசாமி, நெ.124-ஏ, ஜெனரல் பஜார், தென்னூர், திருச்சி என்பவர் MVI திருமதி.விமலாவின் உத்தரவின்படி பொது மக்களிடமிருந்து கூடுதல் தொகை பெற்று, MVI-க்கு கையூட்டு கொடுக்க வைத்திருந்த பணம் ரூ.12,870/- கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும் அலுவலகத்தின் மாடிபடி கீழ் சிதறி கிடந்த ரூ.6,710/- மற்றும் அந்த அலுவலகத்தில் உள்ளே "P2" இருக்கையின் பக்கத்தில் இருந்த ஜன்னல் அருகே கேட்பாரற்று கிடந்த ரூ.4,300/-ம் மற்றும் அந்த அலுவலகத்தின் போர்டிகோவில் நின்று கொண்டிருந்த வட்டார போக்குவரத்து அலுவலரின் வாகனம் TN 45 AG 7777 பதிவெண் கொண்ட வாகனத்தின் டேஷ்போடில் இருந்த ரூ.50,000/-ம் ஆக மொத்தம் ரூ.1,05,720/-ம்

மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் புரோக்கர் திரு.ரமேஷ் என்பவரிடமிருந்து மோட்டார் வாகன நிலை 2 அவர்களின் தமிழ் மற்றும் ஆங்கில சீல் கட்டைகளும், புரோக்கர் திரு.சேதுராஜ் என்பவரிடமிருந்து வெளிநாட்டு நாணயங்களின் பெயர்கள் எழுதி அதற்கு நேரே தொகைகள் எழுதப்பட்ட சில துண்டு சீட்டுகளும் சில முக்கிய ஆவணங்களும் கைப்பற்றப்பட்டு, மேற்சொன்ன நிகழ்வுகள் குறித்து ஒரு திடீர் சோதனை செயல்முறைகள் தயார் செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளின்படி மேற்சொன்ன நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 29.07.2025ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள (Sd) (xxxx)ஆ.இராமலெட்சுமி, 30.07.2025 திடீர் சோதனை செயல்முறை இன்று 29.07.2025 பிற்பகல் சுமார் 14.00 மணிக்கு திருச்சி - திண்டுக்கல் சாலையில் பிராட்டியூரில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளத்துடன் அமைந்துள்ள அரசு கட்டிடத்தில் திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தை ஆய்வுகுழு ஆய்வாளர் திருமதி.ஆ.இராமலட்சுமி, த/பெ ஆறுமுகம், க/பெ வீரராகவன், ஆய்வுகுழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், திருச்சி அவர்கள் தலைமையில், திரு.அ.பிரசன்னவெங்கடேஷ், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி மற்றும் குழுவினர் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் திடீர் சோதனை செயல்முறைகள். திருச்சி மாநகரம், திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணியாற்றும் பொதுப்பணியாளர்கள் தங்கள் அலுவலகப்பணியினை செய்து தருவதற்காக இடைத்தரகர்கள் மூலம் பொது மக்களிடமிருந்து கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், இடைத்தரகர்கள் மேற்படி பொது பணியாளர்களுக்காக, பொது மக்களிடமிருந்து அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக பணம் பெற்று பொது பணியாளர்களுக்கு கொடுப்பதாகவும், மேலும் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.நடராஜன் என்பவர் திரு.சேதுராஜ் என்ற இடைத்தரகர் மூலமாகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திருமதி.விமலா என்பவர் பாப்புலர் டிரைவிங் ஸ்கூலில் பணிபுரியும் திரு.ரமேஷ் என்ற இடைத்தரகர் மூலம் வசூல் செய்வதாகவும், அதில் தாங்களும் பயன் பெறுவதாகவும், திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் இன்று 29.07.2025 பிற்பகல் சுமார் 13.45 மணிக்கு மாவட்ட ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது தென்கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி அலுவலகம் முன்று தளங்கள் கொண்ட கட்டிடமாகும். வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் அருகே தகுதி சான்று புதுப்பித்தலுக்காக வாகனங்கள் இருந்தன. வளாகத்தின் வெளியேயும், அலுவலகத்தின் உள்ள அனைத்து அறைகளிலும் ஆங்காங்கே காவலர்களை நிறுத்தி, அங்கிருந்த அனைவருக்கும் திடீர் சோதனை செய்ய வந்துள்ள நோக்கத்தை ஆய்வுகுழு ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்தனர். வளாகத்தின் உள்ளே

ஆங்காங்கே நின்று கொண்டிருந்தவர்கள் வந்த ஒழிப்பு காவலர்களை பார்த்ததும் ஒரு சிலர் அந்த இடத்தை விட்டு வேகமாக சென்றுவிட்டனர். ஒரு சிலரை காவலர்கள் உதவியுடன் பிடித்து அலுவலகத்திற்குள்ளே அழைத்து வந்து அமரவைக்கப்பட்டது. மேற்படி அலுவலக வளாகத்திற்கு கிழக்கு பக்கம் பிரதான நுழைவாயில் அமைந்துள்ளது. கட்டிடத்தின் தரைத்தளத்தில் கிழக்குபுற பிரதான வாயிலும், அதற்கு முன்புறம், சாய்வு படிக்கட்டு மற்றும் படிக்கட்டுகளும், போர்ட்டிகோவும் அமைந்துள்ளது. கட்டிடத்தின் தெற்கு பக்கம் முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டு அமைந்துள்ளது. அந்த முதல் தளத்தில் பதிவறை மற்றும் கூட்டரங்கமும் மற்றும் இரண்டாவது தளத்தில் துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகமும் மற்றும் இணை போக்குவரத்து ஆணையர் அலுவலகமும் அமைந்துள்ளது. தரைத்தளத்தில் வடக்கே மோட்டார் வாகன ஆய்வாளர் அறை மற்றும் பாண்டன் அலுவலர்கள் அறை அமைந்துள்ளது. மேற்படி கட்டிடத்தின் தரைத்தளத்தின் உள்ளே உள்ள ஹாலில், பொது மக்கள் அமரக்கூடிய இருக்கைகளும், அதன் மேற்கே வட்டார போக்குவரத்து அலுவலர் அறையும் உள்ளது. ஹாலின் தெற்கே கண்ணாடியால் தடுக்கப்பட்ட இரண்டு அறைகளும், அதன் தென்புறம் அலுவலர்கள் அமர்ந்து பணிபுரியும் அறையும் உள்ளது. காவலர்கள் உதவியுடன் அழைத்து வரப்பட்ட தனிநபர்களை ஆய்வு குழு ஆய்வாளர் மூலம் விசாரணை செய்ய,

வ.எ	பெயர்	அலுவலகம் வந்த காரணம்	கையிருப்பு பணம் ரூ.
1)	கௌசிக் வயது 27/2025, த/பெ கோவிந்தராஜ், PLA Bus மேலாளர், கண்டோன்மென்ட், திருச்சி.	PY 02 M 9919 என்ற பேருந்தை MVI காண்பிக்க வந்துள்ளார்	900/-
2)	தினேஷ் வயது 19/2025, த/பெ சேகர், 63, ருக்மணி இல்லம், கொட்டப்பட்டு, திருச்சி.	TN 45 CF 2181 என்ற இரு சக்கர வாகனத்தை MVI காண்பிக்க வந்துள்ளார்	8000/-
3)	விஜய், வயது 20/2025, த/பெ ராஜா, எண்.7, மிலிட்டரி காலனி, பொன்மலை, திருச்சி.	-do-	110/-
4)	சாந்தகுமார் வயது 48/2025, த/பெ பொன்னன், 12சி, முதல் தெரு, சுப்ரமணியபுரம், திருச்சி.	Dr.இளங்கோ என்பவரின் வாகனத்திற்கு RC புதுப்பிக்க வேண்டி	310/-
5)	வெற்றிவேல், வயது 31/2025, த/பெ வேலுமணி, எண்.11, பாரதி நகர் விஸ்தரிப்பு, ஏர்போர்ட், திருச்சி.	TN 45 CB 6498 என்ற இரு சக்கர வாகனத்தை MVI காண்பிக்க வந்துள்ளார்	4500/-

6)	சூசை ஆரோக்கியராஜ், வயது 28/2025, த/பெ ஜெயசீலன், எண்.46, துரைசாமிபுரம், பாலக்கரை, திருச்சி.	SJP Auto Mobiles என்ற ஷோரூமிற்கு புது வாகன பதிவிற்கு வந்துள்ளார்	550/-
7)	பொன்னுசாமி வயது 66/2025, த/பெ நல்லேந்திரன், 3/227, குண்டூர், திருச்சி.	TN 45 - AS 6841 என்ற இரு சக்கர வாகனத்தின் ஆர்.சி புத்தகம் காணாததற்கு விபரம் கேட்க	320/-
8)	முத்துக்குமார் வயது 33/2025, த/பெ பழனிச்சாமி, 2/50, அருவங்கால்பட்டி, நவலூர் கொட்டப்பட்டு, திருச்சி.	RC புதுப்பிக்க வேண்டி விபரம் கேட்க	220/-
9)	வேணுகோபால், வயது 58/2025, த/பெ சென்றாயப்பெருமாள், 108, வசந்த் நகர், கருமண்டபம், திருச்சி.	Auto consulting Work சம்மந்தமாக விபரம் கேட்க	860/-
10)	தியாகராஜன் வயது 40/2025, த/பெ சண்முகம், 2/181, வியாழன்மேடு, போதாவூர், திருச்சி.	TN 45 BL 7177, TN 45 CF 5567 TN 45 BD 9267 TN 45 AT 0577 ஆகிய நான்கு பேருந்துகளுக்கு காலாண்டிற்கான வரி செலுத்த வேண்டி	1,30,000
11)	செந்தில்குமார், வயது 57/2025, த/பெ தங்கையன், 5 ஹெச், மல்லிகைபுரம், தென்னூர், திருச்சி.	தன்னிடம் பணம் வாங்கிய ராஜேந்திரன் என்பவரை பார்க்க வந்ததாக	1,176/-

மேற்கண்ட 11 நபர்களிடம் இருந்த பணம் பற்றி ஆய்வுகுழு ஆய்வாளர் கேட்க அப்பணம் குறித்து அவர்கள் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அவர்களிடமே மீண்டும் பணம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், பின்வரும் மற்ற நபர்களை விசாரணை செய்ய (1) திரு.சேதுராஜ், வயது.64/2025, த/பெ.மாணிக்கம் செட்டியார், 3/109ஏ, புதுத்தெரு, சோமரசம்பேட்டை என்றும், தான் ஆர்.டி.ஓ-க்கு புரோக்கராக இருப்பதாகவும், ஆர்.டி.ஓ சொல்லும் வேலைகளை செய்வேன் என்றும், தான் அன்றாடம் மோட்டார் வாகன சம்பந்தமான அனைத்து வேலைகளை முடித்து கொடுக்க பொது மக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களிடமிருந்து வசூல் செய்த பணத்தை, அலுவலக பணி முடித்து செல்லும்போது, ஆர்.டி.ஓ அவர்களிடம் கொடுத்துவிடுவேன் என்றும் தெரிவித்தார். மேலும், அவர் வைத்திருந்த பணம் ரூ.31,840/-, பென்சிலால் பெயர் மற்றும் பணம் எழுதப்பட்ட துண்டு சீட்டு-1 மற்றும் சில மோட்டார் வாகன அலுவலக ஆவணங்களை எடுத்து ஆஜர் செய்தார். மேலும், அவர் வைத்திருந்த படிவம் (1) Application for Renewal of Permit

Authorization for the vehicle TN45 BJ 7918, (2) Application for Renewal of Permit Authorization for the vehicle TN45 BJ 7897, (3) TN57 BS 1512 என்ற மோட்டார் வாகன அனுமதி சீட்டு விண்ணப்பம், (4) TN45 BH 4226 என்ற ஒப்பந்த ஊர்தி மோட்டார் வாகன அனுமதி சீட்டு புதுப்பித்தல் விண்ணப்பம், (5) TN45 AD 3111 என்ற சரக்கு வாகன புதிய அனுமதி சீட்டு விண்ணப்பம் ஆகிய ஆவணங்கள் பற்றியும், அவர் வைத்திருந்த பணம் ரூ.31,840/- மற்றும் பென்சிலால் எழுதப்பட்ட துண்டு சீட்டு பற்றி கேட்க இன்று வட்டார போக்குவரத்து அலுவலருக்காக புரோக்கர்கள் மூலம் வசூல் செய்த நபர்கள் மற்றும் தொகைகள் குறித்த குறிப்பு மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் மற்றும் வசூல் செய்த தொகை என்றும் தெரிவித்ததன் பேரில் ஆவணங்கள், துண்டு சீட்டு மற்றும் பணம் ரூ.31840/-ஐ ஆய்வு குழு ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது, மேலும் (2) திரு.ரமேஷ், வயது.41/2025, த/பெ.பெரியசாமி, எண்.124ஏ, ஜெனரல் பஜார், தென்னூர், திருச்சி என்பவரை விசாரணை செய்ய, தான் பாப்புலர் டிரைவிங் ஸ்கூலில் பணிபுரிவதாகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.விமலா அவர்கள் சொல்லும் வேலைகளை செய்வேன் என்றும், தான் அன்றாடம் மோட்டார் வாகன சம்பந்தமான அனைத்து வேலைகளை முடித்து கொடுக்க பொது மக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களிடமிருந்து வசூல் செய்த பணத்தை, அலுவலக பணி முடித்து செல்லும்போது, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.விமலா அவர்களிடம் கொடுத்துவிடுவேன் என்றும் தெரிவித்தார். மேலும், அவர் வைத்திருந்த பணம் ரூ.12,870/- மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-2 அவர்களின் பெயர்களில் தமிழ் மற்றும் ஆங்கில சீல் கட்டைகள்-2னை எடுத்து ஆஜர் செய்தார். மேலும், அவர் வைத்திருந்த பணம் பற்றி கேட்க அவர் எதுவும் சொல்லாமல் மவுனமாக இருந்தார். அப்பணம் மோட்டார் வாகன சம்பந்தமான அனைத்து வேலைகளை முடித்து கொடுக்க பொதுமக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களிடமிருந்து வசூல் செய்து, மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.விமலா அவர்களுக்கு கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஆய்வு குழு ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேலும், சீல் கட்டைகள் பற்றி கேட்க அவர் என்னிடம் கொடுத்து வைத்திருந்தார் எனவும், அது தேவைப்படும் போது வாங்கி கொள்வதாகவும் தெரிவித்தார். அரசு அலுவலக முத்திரை சீல் கட்டைகளை தனி நபர் வைத்திருந்ததால் அதனையும் கைப்பற்றப்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் உள்ளே நுழைந்தவுடன் மாடிக்கு செல்லும் படிக்கட்டுகளுக்கு அருகே, ஆங்காங்கே சிதறி கிடந்த ரூபாய் 500, 100, 50, 10 நோட்டுக்களை எடுத்து ஆய்வு குழு ஆய்வாளர் எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் மொத்தம் ரூ.6,710/- பணமும் அதன் அருகில் பிரியா என்பவர் பெயரில் இருந்த பதிவு சான்று புத்தகத்தில் TN 88 Y 2779 HMV GV Tarras Vehicle-ன் உள்ளே ஸ்மார்ட் கார்டு, வரி ரசீது, இன்சூரன்ஸ் மற்றும் ஆர்.டி.வி சர்டிபிகேட் ஆகியவை இருந்தது. மேற்படி பணத்திற்கு யாரும் உரிமை கோராததால், அப்பணம் மோட்டார் வாகன சம்பந்தமான அனைத்து வேலைகளை முடித்து கொடுக்க பொதுமக்கள்

மற்றும் வாகன உரிமையாளர்களிடமிருந்து வசூல் செய்து, வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள பணியாளர்களுக்கு கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஆய்வு குழு ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேலும், அலுவலகத்தின் மேற்குபுறமாக முதலாவது அறை காலியாக இருந்தது. இரண்டாவது அறை நேர்முக உதவியாளர் அறையாகும். அந்த அறையில் அமர்ந்திருந்த நபரை மாவட்ட ஆய்வு குழு ஆய்வாளர் விசாரணை செய்ய திரு.நடராஜன், வயது.57/2025, த/பெ.தங்கவேல், வட்டார போக்குவரத்து அலுவலர் என்றும், அவரிடமிருந்த பணத்தை பற்றி கேட்க, அவர் வைத்திருந்த பணம் ரூ.120/- பற்றி கேட்க, தன்னுடைய சொந்தப்பணம் என்று கூறியதால், அப்பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அந்த அறையில் நின்று கொண்டிருந்த நபர்களை விசாரணை செய்ய (1) திரு.முகம்மது இப்ராஹிம், வயது.34/2025, த/பெ.அப்துல் கரீம், 12ஏ, ஆல்வார்தோப்பு தெரு, பாலக்கரை, திருச்சி என்றும், தான் எடமலைப்பட்டிபுதூரில் உள்ள ஏ.கே.எம். மினி பஸ் ஓனர் என்றும், தான் ரூட் எக்ஸ்டன்சனுக்காக தானும் யூசுப் முகம்மது, வினோத்ராஜ் ஆகியோருடன் விசாரிக்க வந்ததாகவும், அவர் வைத்திருந்த பணம் ரூ.1000/- பற்றி கேட்க, தன்னுடைய சொந்தப்பணம் என்று கூறியதால், அப்பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது, (2) திரு.யூசுப் முகம்மது, வயது.30/2025, த/பெ.இர்ஷாத் அகமது, 155 ஈ, சின்னசாமி நகர், தென்னூர், திருச்சி என்றும், தனது ஓனருடன் வந்ததாகவும், அவர் வைத்திருந்த பணம் ரூ.5,400/- பற்றி கேட்க, ஏ.கே.எம். மஹால் ஓனர் நேற்று தன்னிடம் ரூபாய் 10,800 கொடுத்ததாகவும், அதில் செலவு போக மீதம் வைத்திருந்ததாக சொன்னதால், அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது, (3)திரு.வினேத்ராஜ், வயது.36/2025, த/பெ.ஆரோக்கியசாமி, 60, கீழத்தெரு, கீழவாளாடி, திருச்சி மாவட்டம் என்றும் தான் தனது ஓனர் முகம்மது இப்ராஹிமின் கார் டிரைவர் என்றும், அவர் வைத்திருந்த பணம் ரூ.16,250/- பற்றி கேட்க, நேற்று டி.என்.45 பிஜே 8205 என்ற இரு சக்கர வாகனத்தை திருச்சி, கிருஷ்ணா மோட்டார்சில் அடமானம் வைத்து ரூ.15,000/- வாங்கியதாகவும், மீதமுள்ள பணம் ரூ.1,250/- தனது சொந்தப்பணம் என்று தெரிவித்தால் அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதனை அடுத்து வட்டார போக்குவரத்து அலுவலக அறையில் 12 மேஜைகள் போடப்பட்டு, அதில் பணியாளர்கள் அவரவர் இருக்கையில் அமர்ந்திருந்து பணிகளை மேற்கொண்டிருந்தனர். அந்த பணியாளர்களை ஆய்வு குழு ஆய்வாளர் விசாரிக்க, முதலாவது இருக்கையில் அமர்ந்திருந்த (1) திரு.கே.இளங்கோவன், வயது 56/2025, த/கெ கந்தசாமி, நேர்முக உதவியாளர் என்றும், அவரிடம் ரூ.750/-ம், (2) திரு.பி.முருகானந்தம் வயது 31/2025, த/பெ பிச்சை, "பி3" இருக்கை இளநிலை உதவியாளர், என்பவரிடம் பணம் எதுவும் இல்லை, (3) திருமதி.எம்.முத்துமாரி வயது 44/2025, த/பெ மாரிமுத்து, "பி" இருக்கை, கண்காணிப்பாளர் என்றும் ரூ.1540/-ம், (4) திருமதி.ஏ.காயத்திரி, வயது 38/2025, க/பெ சுகுமார், "ஏ" இருக்கை கண்காணிப்பாளர் என்றும் ரூ.4650/-ம், (5) திருமதி.எஸ்.தெய்வானை, வயது 45/2025, த/பெ செல்வம், "ஏ4" இருக்கை இளநிலை உதவியாளர் என்றும், ரூ.420/-ம், (6) திருமதி.பூங்குழலி, வயது

43/2025, க/பெ ரவிச்சந்திரன், கணக்கர், என்றும் ரூ.490/-ம் (7) திரு.கார்த்திகேயன், வயது 38/2025, த/பெ மோகன்தாஸ், "பி2" இருக்கை உதவியாளர் என்றும் ரூ.143/-ம், (8)திரு.பிரசாந்த், வயது 24/2025, த/பெ தனபாலன், "ஏ3" இருக்கை தட்டச்சர் என்றும் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று கூறினார், (9) திரு.பாலகிருஷ்ணன், வயது 52/2025, த/பெ குமாரசாமி, "இ4" இருக்கை இளநிலை உதவியாளர் என்றும் ரூ.650/-ம், (10) திரு.பாஸ்கர், வயது 50/2025, த/பெ குழந்தைசாமி அலுவலக உதவியாளர் என்றும் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று கூறினார் (11) திரு.விஜயானந்த், வயது 33/2025, த/பெ அண்ணாவி, "ஏ2" இருக்கை உதவியாளர் என்றும் ரூ.450/-ம், (12) திருமதி.ஐஸ்வர்யா, வயது 29/2025, க/பெ சஞ்சய்குமார், "பி1" இருக்கை உதவியாளர் என்றும் ரூ.950/-ம், வைத்திருந்தார்கள். மேற்படி அலுவலர்கள் அது தங்களுடைய சொந்தபணம் என தெரிவித்ததின்பேரில், பணியாளர் கையிருப்பு பதிவேடு 29.07.2025 தேதிக்கான பதிவுடன் ஒப்பிட்டு பார்த்து சரியாக இருந்ததால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும், திரு.கார்த்திகேயன் அமர்ந்திருந்த "பி2" இருக்கைக்கு வெளிப்புற ஜன்னல் ஓரமாக இருந்த பணத்தை ஆய்வு குழு ஆய்வாளர் அவர்கள் மூலம் எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் மொத்தம் ரூ.4,300/- இருந்தது. அப்பணம் பற்றி திரு.கார்த்திகேயனிடம் கேட்க, வெளியே நின்றுகொண்டிருந்த தனிநபர் காவலர்களை கண்டதும், வைத்துவிட்டு சென்றுவிட்டதாக தெரிவித்தார். மேலும், கேட்பாரற்று கிடந்த அப்பணம் ரூ.4,300/- பற்றி யாரும் உரிமை கோரததால், அப்பணம் மோட்டார் வாகன சம்பந்தமான அனைத்து வேலைகளை முடித்து கொடுக்க பொதுமக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களிடமிருந்து வசூல் செய்து, வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள பணியாளர்களுக்கு கொடுக்க வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் ஆய்வு குழு ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த நபர்களை விசாரிக்க, (1) திருமதி.விமலா, வயது.53/2025, க/பெ.சம்பத்குமரன், தான் வட்டார போக்குவரத்து திருச்சி மேற்கு அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 ஆக பணிபுரிவதாகவும், தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்றும் தெரிவித்தார். (2)திரு.மணிபாரதி, வயது.43/2025, த/பெ,கவியரசு, தான் வட்டார போக்குவரத்து திருச்சி மேற்கு அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-2 ஆக பணிபுரிவதாகவும், அவர் எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.400/- பற்றி கேட்க, அவர் அப்பணம் தன்னுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. (3) செல்வி.மங்கயர்கரசி, வயது.26/2025, த/பெ.லெட்சுமணன், BONTON LABOUR ஆக புகைப்படம் எடுக்கும் பணி செய்து வருவதாகவும், அவர் எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.100/- பற்றி கேட்க அவர் அப்பணம் தன்னுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. (4) திரு.பாலக்குமார், வயது.42/2025, த/பெ.பாலு என்றும், தான் ஜிணிஹீகி என்ற நிறுவனத்தின் ஒப்பந்த அடிப்படையில் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு வாகன ஓட்டுநராக பணிபுரிவதாகவும், அவர் எடுத்து ஆஜர்

செய்த பணம் ரூ.150/- பற்றி கேட்க அவர் அப்பணம் தன்னுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. (5) திருமதி. வயது 46/2025, த/பெ.செல்வராஜ், BONTON LABOUR ஆக புகைப்படம் எடுக்கும் பணி செய்து வருவதாகவும், அவர் எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.640/- பற்றி கேட்க அவர் அப்பணம் தன்னுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அலுவலக போர்ட்டிகோவில் இருந்த TN 06 G 2646 Maruti Alto K10 Test Vehicle ஐ ஓட்டுனர் திரு.பாலகுமார் மூலம் ஆய்வு குழு ஆய்வாளர் முன்னிலையில் திறந்து சோதனை செய்துபோது வாகனத்தில் எவ்வித பணமோ, ஆவணங்களோ இல்லை. மேலும் அருகில் நின்று கொண்டிருந்த வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.நடராஜன் அவர்களின் அலுவலக அரசு வாகனம் TN 45 AG 7777-த்தை ஓட்டுனர் திரு.பாலகுமார் மூலம் ஆய்வு குழு ஆய்வாளர் முன்னிலையில் திறந்து சோதனை செய்து போது வட்டார போக்குவரத்து ஆய்வாளரின் இருக்கைக்கு முன்புறமிருந்த டேஷ் போர்டை திறந்து பார்க்க அதில் வெளிர் பச்சை நிற கேரி பேக்கின் 500, 200, 100 என கத்தையாக பணம் மற்றும் பேனாவினால் எழுதப்பட்ட துண்டு சீட்டுடன் இருந்தது. அப்பணத்தினை ஆய்வு குழு ஆய்வாளர் மூலம் எண்ணிப்பார்க்க ரூ.50,000/- இருந்தது. அது பற்றி வாகன ஓட்டுனரிடம் கேட்க அது பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார். இது குறித்து வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.நடராஜன் அவர்களிடம் கேட்க மௌனமாக இருந்தார். அப்பணம் பொதுமக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களிடம் இருந்து கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் கைப்பற்றப்பட்டது. பின்னர், மேற்படி திடீர் சோதனையின் போது அலுவலகத்தின் வெளியே நின்று கொண்டிருந்த பின்னர் பெயர் விவரம் தெரிந்த திரு.ஹரிஹரன் 25/2025, த/பெ வெங்கடேஷ், 4/7, சாலைபிள்ளையார் கோவில் தெரு, புத்தூர், திருச்சி என்பவர் சுமார் 17.00 மணியளவில் ஆஜராகி தனது அம்மா திருமதி.பிரியா பெயரில் உள்ள பதிவு சான்று புத்தகத்தில் TN 88 Y 2779 HMV GV Tarras Vehicle-ன் உள்ளே ஸ்மார்ட் கார்டு, வரி ரசீது, இன்சூரன்ஸ் மற்றும் RTV Certificate உடன் இருந்த ஆவணமானது தனது அம்மாவினுடையது என்றும் தான் வைஷ்ணவி டிரான்ஸ்போர்ட் என்ற பெயரில் வாகனம் நிர்வாகம் செய்து வருவதாகவும் FC பார்ப்பதற்காக புரோக்கரிடம் கொடுப்பதற்கு எனது தெரிந்த நண்பர் மூலம் கொடுத்து அனுப்பியதாகவும் கூறியவரிடம் அவரது முகவரி மற்றும் வாகன விபரங்கள் கேட்டு கொண்டதன் பேரில் விபரங்களை ஆவணங்கள் மூலம் சரிபார்க்க அவைகள் ஒத்து இருந்ததால் மேற்படி ஆவணத்தினை அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. பின்னர், மேற்கண்ட அலுவலகத்தின் நேர்முக உதவியாளர் திரு.இளங்கோவன் என்பவரிடம் பின்வரும் ஆவணங்கள் (1) வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்சிராப்பள்ளி(மேற்கு) பணம் கையிருப்பு பதிவேடு, 01.01.2025 முதல் 29.07.2025 வரையில் பதிவுகள் கொண்டது, (2) வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்சி

(மேற்கு) 2025, பணியாளர்களின் வருகைப்பதிவேடு 29.07.2025 முதல் பதிவுகள் செய்யப்பட்டது, (3) வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்சிராப்பள்ளி(மேற்கு) நடமாட்ட பதிவேடு (Movement Register) 01.01.2025 முதல் 29.07.2025 முதல் பதிவுகள் செய்யப்பட்டது, ஆகியவற்றினை மேல்நடவடிக்கைகாக திரு.பிரசன்னவெங்கடேஷ், காவல் ஆய்வாளர் அவர்களால் கைப்பற்றப்பட்டது. மாலை சுமார் 18.00 மணியவில் பெண் பணியாளர்களை வீட்டிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டது. மேலும், மேற்கண்ட 2 தனிநபர்களிடமும் விசாரணைக்கு தேவைப்படும்போது ஆஜராகும்படி அறிவுறுத்தி அனுப்பிவைக்கப்பட்டது. மேற்கண்ட அனைத்து நிகழ்வுகளையும் அலுவலகத்தில் இருந்து எடுத்து வரப்பட்ட Video Recorder மூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறை இரவு 19.15 மணிக்கு முடிக்கப்பட்டது. Submitted to the Court of the Hon'ble Principal District and Sessions Judge, Trichy District. Received the report at 14.45 hrs on 30/07/2025 and registered a case in Trichy V&AC Cr.No.10/2025, u/s 106 BNSS r/w 7, 7(A) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 15.30 hrs on 30/07/2025 (Sd) (xxxx), 30/07/2025, Inspector of Police, V&AC, Trichy.